இந்திய உச்ச நீதிமன்றம்

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு

சிறப்பு அனுமதி மனு(குற்ற) எண். 2302/2017

உடன்

9431/2011 மற்றும் 9631-9634/2012

ஷஃபி முகமது மேல்முறையீட்டாளர்

எதிர்

இமாச்சலப் பிரதேச மாநிலம் எதிர் மேல்முறையீட்டாளர்

தீர்ப்புரை

<u>சிறப்பு அனுமதி மனு (குற்ற) எண் 2302/2017:</u>

வழக்கைப் பரிசீலிக்கும்போது எழுந்த வினாக்களுள் ஒன்று யாதெனில், புலனாய்வின்போது, குற்றச் சம்பவ இடம் அல்லது கைப்பற்றுதல் இடத்தின் படக்காட்சி, திரட்டப்பட்ட சான்றுக்கு நம்பிக்கையூட்டத் தேவைப்படுமா? என்பதாகும்.

2. 2017-ஆம் ஆண்டு ஏப்ரல் 25-ஆம் தேதியிட்ட உத்தரவில் படக்காட்சியெடுத்தலானது புலனாய்வுக்கு உதவியாயிருக்கும் என்றும், பிற நாடுகளில் வெற்றிகரமாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது என்பதாகவும் கற்றறிந்த கூடுதல் தலைமை அரசு வழக்குரைஞர் திரு. எ.என்.எஸ். நத்கர்னி அவர்களின் கூற்று பதிவு செய்யப்படுகிறது.

அவர், அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தில் "உடலோடு அணியப்படும் நிழற்படக்கருவிகளின் "கண்டுணரத்தக்க பயன்களைக் குறிப்பிட்டார். "உடலோடு அணியப்படும் நிழற்படக் கருவிகள் "சமூக விரோதப்போக்கிற்கு எதிரான தடையாகவும், சான்றினைச் சேகரிக்கும் ஒரு கருவியாகவும் செயல்படுகிறது.சான்றினைச் சேகரிப்பதற்கான புதிய தொழில்நுட்ப கருவி என்பது காலத்தின் கட்டளையாகும். இந்திய அரசு, உள்துறை அமைச்சக போதை மருந்து தடுப்புக் குழுவினராலான கள அலுவலர்களின் கையேட்டையும் அவர் குறிப்பிட்டார்.அடையாளங்காணும் முறையினை படக்காட்சிப்படுத்து வதற்காக வகைசெய்கின்ற, கு.வி.மு.ச., பிரிவு 54- அ-வும், ஒப்புதல் வாக்குமூலம் அல்லது வாக்குமூலத்தை மேற்படி வகையத்தின் கீழ் ஒலி-ஒளிப் பதிவு செய்வதற்காக வகைசெய்கின்ற, கு.வி.மு.ச., பிரிவு 164 (1) -இன் வரம்புரையும் குறிப்பீடு செய்யப்பட்டது.

3. அதன்பிறகு, இவ்விசய மானது, மாநிலங்களின் முதன்மை செயலாளர்களுடன், இந்திய உள்துறைச் செயலரால் விவாதிக்கப்பட்டதில், குற்றம் நடந்த இடத்தில் படக்காட்சியெடுப்பதைப் பயன்படுத்துவதற்காக, ழிகாட்டி-வரைப்படமொன்றைத் தயாரித்து, அதை எளிதாக்கவும், நிலையான செயற்படு நடைமுறை (நி.செ.ந) ஒன்றை முன்மொழியவும், நிபுணர்களின் குழு (நி.கு.) ஒன்றை அமைக்க முடிவெடுக்கப்பட்டது என்பது 2017-ஆம் ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 12-ஆம் நாளிட்ட உத்தரவில் குறிப்பிடப்பட்டது.

இருப்பினும், நிதி பற்றாக்குறை, விவரங்களைச் சேகரித்து பாதுகாக்கும் பிரச்சனைகள், சான்றினை ஏற்குந்தன்மை போன்றவற்றின் காரணமாக அதனைச் செயற்படுத்துதலைக் குறித்து அச்சந்தெரிவிக்கப்பட்டது.தடயவியல் பகுப்பாய்வுக்கான உயர்தர தெளிவான பதிவுக்கு, அசைவற்ற நிழற்படம் பயனுடையதாய் இருக்கலாம் என்ற கருத்துரையை நாங்கள் குறித்துக் கொண்டோம்.எண்வகை மின்னணு நிழற்படக் கருவிகள், சுழலக்கூடியதும், சாயக்கூடியதுமான முக்காலியின் மேலுள்ள நிலை மேடையில் வைக்கப்படலாம்.பாதுகாப்பான மின் தகவல் வழிகள் (portals) அமைக்கப்படுவதன் மூலம் புலனாய்வு அலுவலர் குற்றம் நடந்த இடத்தில் எடுக்கப்பட்ட நிழற்படங்களை மின்னஞ்சல் செய்யலாம்.எண்வகை மின்னணு தோற்றப் பதிவுகளை நிரந்தர பதிவுருவாக, மாநில மூலத்தகவல் கணினி (server)-இல் வைத்துக்கொள்ளப்படலாம்.

<u>சிறப்பு அனுமதி மனு(குற்ற) எண் 9431/2011</u>

4. 2017-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 12-ஆம் நாளிட்ட உத்தரவில் குறிப்பிட்டவாறு, இச்சிறப்பு அனுமதி மனுவில் பரிசீலனைக்காக ஒரே மாதிரியான கேள்வி எழுந்ததால், நாங்கள் மின்னணு பதிவுருவின் ஏற்குந்தன்மை குறித்த வினாவின்பேரில், கற்றறிந்த நீதிமன்ற உதவியர், மூத்த வழக்குரைஞர் செல்வி மீனாக்ஷி அரோரா, அவருக்கு உதவியாக திருமதி/செல்வி அனன்யா கோஷ் ஆகியோரின் வாதங்களைக் கேட்டோம்.

நாங்கள், இந்திய அரசுக்காக முன்னிலையான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. யஷாங்க் அத்யரு மற்றும் கற்றறிந்த வழக்குரைஞர் திருமதி/செல்வி ஷிரின் கஜூரியா அவர்களின் வாதுரைகளையும் கேட்டோம்.

5.ஒரு வாக்குமூலம் சான்றாகக் கொடுக்கப் பட்டால், தொடர்புடைய கருவியை இயக்குவது அல்லது தொடர்புடைய செயல்பாடுகளை மேலாண் செய்வது தொடர்பான பொறுப்புடைய நிலையை வகிக்கின்ற ஒரு நபரிடமிருந்து, மேற்படி வகையத்தின்படியாக சான்றிதழ் ஒன்று கோரப்பட்டது என்பதாக, சாட்சியச்சட்டத்தின் பிரிவு 65 பி (4) -இன் கீழான நிபந்தனைகளின் பொருந்துகை குறித்த வினாவின்பேரில் அச்சந்தெரிவிக்கப் பட்டது.மின்னணு சான்று தொடர்புடையதாயிருந்து, மின்னணு ஆவணத்தை உருவாக்கிய கருவியின் பாதுகாப்புப் பொறுப்பிலில்லாதவரான நபர் ஒருவரால் அது முற்படுத்தப்பட்டால், அத்தகைய சான்றிதழைக் கோருதல் கட்டாயமானதல்ல என்று பணிந்துரைக்கப் பட்டது.சாட்சியச் சட்டத்தின் பிரிவு 65 பி தொடர்புடைய ஏற்கத்தக்க சாட்சியத்தை மெய்ப்பிக்கும் நடைமுறை சார்ந்த ஒரு வகையமாகும் மற்றும் மேற்படி வகையத்தால் உள்ளடக்கப்பட்ட ஒரு மின்னணு பதிவுருவில் உள்ள தகவல் எதுவும் ஓர் ஆவணமாகக் கருதப்படவேண்டும் மற்றும் அசலின்மேல் சான்றில்லாத நடவடிக்கைகள் எதுவும் ஏற்கத்தக்கதென அறிவிப்பதன்மூலம், அக்கூறின்பேரிலான சட்டத்தின் குறையினை நிரப்புவதற்கு திட்டமிடப்பட்டதாகப் பணிந்துரைக் கப்பட்டது.

மின்னணு சான்றினை ஏற்பதன்பேரில், இவ்வகையம் உளதாயிருந்துவரும் சட்டத்தின் மதிப்பைக் குறைப்பதாகப் பொருள்கொள்ளப் படக்கூடாது.

6. குறிப்பிடப்படலாகின்ற சில தீர்முடிவுகளை நாங்கள் முழுதூடாக எடுத்துக்கொண்டுள்ளோம். **இராம் சிங் மற்றும் பலர் எதிர்-கர்னல் இராம் சிங், 1985 (சப்ளி.) எஸ்.சி.சி. 611: (ஏ.ஐ. ஆர்.1986 எஸ்.சி.3) -** இல் மூவரமர் நீதியராயம் மேற்படி பிரச்சனையைப் பரிசீலித்தது.துல்லியமாகப் பதிவு செய் தல் மெய்ப்பிக்கப்பட இயலும் என்பதற்குட்பட்டு, புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் புதிய கருவிகளால் ஈட்டப்படவேண்டிய சாட்சியச் சட்டத்தின் நன்மைகளை மறுப்பது தவறானது என்பதனை அங்கீகரிக்கும் வகையில், **ஆர் எதிர்-மக்சூத் அலி, (1965) 2 ஆல் இ.ஆர். 464, ஆர் -எதிர்-ராப்சன், (1972) 2 ஆல் இ.ஆர் .699-இல், ஆங்கில தீர்ப்புரைகள் மற்றும் அமெரிக்கன் சட்டவியல் 2 டி (தொகுதி 29) பக்கம் 494-**இல் குறிப்பிடப்பட்ட அமெரிக்கச் சட்டம் ஆகியவை மேற்கோள்காட்டப்பட்டன.அத்தகைய சான்றை எப்போதும் சில எச்சரிக்கையுடன் கருத்திற்கொண்டு, ஒவ்வொரு வழக்கின் அனைத்து சூழ்நிலைகளின் துணைகொண்டு மதிப்பிடவேண்டும்.மின்னணு சான்றானது, அதன் நம்பகத்தன்மையைக் குறித்து நீதிமன்றத்தால் பின்பற்றப்படும் பாதுகாப்பு வழிகளுக்குட்பட்டு ஏற்கப்படவேண்டியதாகத் தீர்மானிக்கப்பட்டது.

ஒலிநாடா-பதிவு வகையில், பேசுபவரின் குரல் உரிய முறையில் அடையாளம் காணப்பட வேண்டுமென கருத்துரைக்கப்பட்டு, பதிவு செய்பவரால், வாக்குமூலத்தின் துல்லியத்தை மெய்ப்பிக்குமாறு கோரப்பட்டு, இடைமாற்றம் உண்டுபண்ணும் சாத்தியத்தை நீக்கவும் கோரப்பட்டது.சாட்சியப் பகுதியின் நம்பகத்தன்மைானது, பொருண்மைச் சூழலின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளில் நிச்சயமாகத் தீர்மானிக்கப்பட வேண் விசயமாகும்.இருப்பினும், மின்னணு சான்றின் தொடக்கநிலை ஏற்பானது, தொடர்புடையதாயிருந்தால், எந்தத் தொழில்நுட்பத்தின்பேரிலும் தகுதியற்றதென விலக்கப்பட இயலாது.

7. துக்காராம் எஸ். திக்உேறால் எதிர் மாணிக்ராவ் சிவாஜி கொகடே, (2010) 4 எஸ்.சி.சி .329:(ஏ.ஐ ஆர் .2010 எஸ்.சி. 965) - இல் அதே கோட்பாடு மீண்டும் வலியுறுத்தப்பட்டது.புதிய தொழில்நுட்பங்களும், கருவிகளும் காலத்தின் கட்டளையாகுமென இந்நீதிமன்றம் கருத்துரைத்தது.அத்தகைய கருவிகள் இடைமாற்றம் உண்டுபண்ணத்தக்க தன்மை உடையவையாக இருந்தாலும் அத்தகைய சான்றினை ஏற்று, தீர்மானிக்கக்கூடிய வகையில் விரிவான விதி ஏதும் வகுக்கப்படவில்லை. அதன் நம்பகத்தன்மை மற்றும் துல்லியத்தின் மெய்ப்பிப்புத் தரம், மற்ற ஆவணச் சான்றினைவிட மிகவும் கட்டுக்கோப்பானதாகும்.

8. தகவல் தொழில்நுட்பத்தின் முன்னேற்றமும், அறிவியல் ரீதியான போக்கும் புலனாய்வு முறையில் ஊடுருவியிருக்க வேண்டும் என்று **டொமசோ புருனோ மற்றும் ஒருவர் -எதிர்- உத்தரப் பிரதேச மாநில அரசு, (2015) 7 எஸ்.சி.சி. 178:(ஏ.ஜ.ஆர்.2015 எஸ்.சி. (சப்ளி.) 412)** -இல் மூவரமர் நீதியராயம் கருத்துரைத்தது.மின்னணு சான்று, பொருண்மைகளை நிலைநாட்டுவதற்கு பொருத்தமுடையதாகும்.அறிவியல் மற்றும் மின்னணுரீதியான சான்று, புலனாய்வு முகமைக்கு பேருதவியாக இருக்கலாம். **முகமது அஜ்மல் அமீர் கசாப் -எதிர்-மகாராஷ்டிர மாநில அரசு, (2012) 9 எஸ்.சி.சி. 1:(ஏ.ஜ,ஆர்.2012 எஸ்.சி. 3565) மற்றும் அரசு (என்.சி.டி. டெல்லி) -எதிர்-நவ்ஜோத் சாந்து, (2005) 11 எஸ்.சி.சி. 600:(ஏ.ஜ.ஆர்.2005 எஸ்.சி. 3820)** -இல் இந்நீதிமன்றத்தின் தீர்முடிவுகளைக் குறிப்பீடு செய்தது.

9. இருப்பினும், நாங்கள், **அன்வர் பி.வி. -எதிர் பி.கே.பஷீர் மற்றும் பலர், (2014) 10 எஸ்.சி.சி. 473:(ஏ.ஜ.ஆர்.2015 எஸ்.சி. 180)** -இல் இந்நீதிமன்றத்தின் மூவரமர் நீதியராயத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புரையையும் குறிப்பிடலாம்.அத்தீர்ப்புரையில் 24-ஆவது பத்தியில், முதல்நிலைச் சான்று வழியான மின்னணு சான்று, சாட்சியச் சட்டம், பிரிவு 62-ஆல் உள்ளடக்கப்பட்டு, அதற்கு சாட்சியச் சட்டத்தின் பிரிவு 65 பி-இன் நடைமுறை ஏற்கத்தக்கதல்ல எனக் கருத்துரைக்கப் பட்டது.

இருப்பினும், சார்நிலைச் சான்றுக்காக சாட்சியச் சட்டப் பிரிவு 65 பி-இன் நடைமுறை பின்பற்றப்பட வேண்டும் மற்றும் மின்னணு பதிவுருவின் சார்நிலைச் சான்று, சாட்சியச் சட்டத்தின் 63 மற்றும் 65-ஆவது பிரிவுகளின் கீழ் உள்ளடக்கப்படக்கூடியது என்று (மேற்கண்ட) **நவ்ஜோத் சாந்து (ஏ.ஐ.ஆர்.2005 எஸ்.சி. 3820)**-இல் எடுக்கப்பட்ட மாறுபட்ட கருத்து சரியானதல்ல.மின்னணு பதிவுரு, சாட்சியச் சட்டத்தின் பிரிவு 65 பி-இன்படியே மெய்ப்பிக்கப்பட்ட இயலும் என்பதாக 14-ஆவது பத்தியில் கருத்துரைகள் உள்ளன.

10. (மேற்கண்ட) **டொமசோ புருனோ (ஏ.ஐ.ஆர்.2015 எஸ்.சி. (சப்ளி.) 412) மற்றும் இராம் சிங், (ஏ.ஐ.ஆர்.1986 எஸ்.சி. 3)** -இல் மூவரமர் நீதியராயத் தீர்ப்புரைகளைக் கருத்திற்கொண்டபோதிலும், மின்னணு சான்று ஏற்கத்தக்கதென்றும், சாட்சிய ச் சட்டத்தின் பிரிவுகள் 65 ஏ மற்றும் 65 பி-இன் கீழான வகையங்கள் தெளிவாக்கல் வழியானவையும், நடைமுறைசார்ந்த வகையங்களுமானவையுமாகும் என்று பாதுகாப்பாகத் தீர்மானிக்கப்படலாம்.மின்னணு சாட்சியம் நம்பத்தகுந்ததாகவும், தொடர்புடையதாகவும் இருப்பின், அதன் நம்பகத்தன்மை குறித்து நீதிமன்றம் உளநிறைவடைவதற்குட்பட்டு, அது நிச்சயமாக ஏற்றுக்கொள்ளப்படலாம் மற்றும் அதனை ஏற்பதற்கான நடைமுறையானது, அத்தகைய சான்றினை முற்படுத்தும் நபர், பிரிவு 65 பி (உெறச்) (அவ்வாறே 65 பி (4))-இன் கீழ் சான்றிதழ் அளிக்கும் நிலையிலுள்ளாரா?என்பது போன்ற பொருண்மை சூழலின்மீது சார்ந்திருக்கலாம்.

11. சாட்சியச் சட்டம், 1872-இன் பிரிவுகள் 65 ஏ மற்றும் 65 பி, இவ்விசயத்தின்பேரிலான முழுமையான சட்டமாகத் தீர்மானிக்கப்பட இயலாது.(மேற்கண்ட) அன்வர் பி.வி. **(ஏ.ஐ.ஆர்.2015 எஸ்.சி. 180)** -இல் இந்நீதிமன்றம், மின்னணு பதிவுருவின் முதல்நிலைச் சான்று, சாட்சியச் சட்டத்தின் பிரிவுகள் 65 ஏ மற்றும் 65 பி-இன் கீழ் உள்ளடக்கப்படவில்லை என 24-ஆவது பத்தியில் தெளிவாக்கியது.சார்நிலைச் சான்று என்பது, நீதிமன்றம் முன்பாக முற்படுத்தப்படும் ஆவணமாகும் மற்றும் "ஆவணம்" என்ற சொல், எந்தப் பொருளின் பேரிலும், அவ்விசயத்தைப் பதிவு செய்யும்பொருட்டு பயன்படுத்தப்படுவதற்கோ அல்லது பயன்படுத்தப் படலாமென்பதற்கோ திட்டமிட்டு எழுத்துகள், எண்கள் அல்லது குறியீடுகள் வழியாகவோ அல்லது அவ்வழிகளில் ஒன்றுக்கு மேலான வழியிலோ சொல்வது அல்லது விவரிப்பது எனப் பொருள்கொள்வதாக சாட்சியச் சட்டத்தின் பிரிவு 3-இல் வரையறுக்கப்பட்டுள்ளது.

12. "மின்னணு பதிவுரு " என்ற சொல், தகவல் தொழில்நுட்பச் சட்டம், பிரிவு 2 (டி) - இல் பின்வரு மாறு வரையறுக்கப்பட்டுள்ளதாவது:

> "மின்னணு பதிவுரு " என்பது, விவரங்கள், பதிவு அல்லது உருவாக்கப்படும் விவரங்கள், சேகரிக்கப்பட்ட தோற்றப் பதிவு அல்லது ஒலி ஆகியவை மின்னணு வடிவத்திலோ அல்லது நுண்ணிய படச்சுருளிலோ அல்லது கணினி உருவாக்கும் நுண்ணிய படிவத்திலோ பெறுதல் அல்லது அனுப்புதல் எனப் பொருள்படும். "

13. " விவரம் " என்ற சொல் தகவல் தொழில் நுட்பச் சட்டத்தின் பிரிவு 2 (ஓ) -இல் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளதாவது:

> "விவரம்" என்பது ஓர் ஒழுங்குமுறையான முறையில் முன்னுருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற அல்லது முன்னுருவாக்கப் பட்டுள்ள தகவல், செய்தி, சங்கதிகள், பொதுக்கருத்துக்கள் அல்லது கட்டளைகள் ஆகியவை ஒரு கணினிப் பொறியமைப்பில் அல்லது கணினிவலைச்செயல்பாட்டுமுறையில்,
>
> செயல்முறையாக்கப்படவும்,
>
> செயல்முறையாக்கப்பட்டுக் கொண்டிருத்தலும் அல்லது செயல்முறையாக்கப்பட்டிருக்கவும் திட்டமிடப்பட்டு, (கணினி அச்சுப் பதிவு வெளியீடுகள், காந்த அல்லது ஒளி சேமிப்பு ஊடகம், விவரப் பதிவு அட்டைகள், விவரப் பதிவு நாடாக்கள்

உட்பட) எம்முறையிலும் அல்லது கணினியின் உள்ளீடான நினைவகத்திலும் சேகரிக்கப்படலாம்."

14. எதிர்த்தரப்பினரல்லாமல், அக்கருவியின் கட்டுப்பாட்டிலிருந்து கொண்டிருக்கின்ற, அச்சான்றிதழை முற்படுத்தும் நிலையிலுள்ள ஒரு நபரால் அத்தகைய மின்னணு சான்றானது முற்படுத்தப்படுகிறபோதுதான், சாட்சியச் சட்டப்பிரிவு 65 பி (4) - இன் கீழ் சான்றிதழ் அளிக்கும் நடைமுறைத் தேவையின் பொருந்துகையானது பயன்படுத்தப் படுகிறது.கருவியை தம் வசம் வைத்திருக்காத ஒரு நபரால் மின்னணு சான்று முற்படுத்தப்படுகிறவிடத்தான நேர்வில், சாட்சியச் சட்டத்தின் பிரிவுகள் 63 மற்றும் 65-இன் பொருந்துந்தன்மை விலக்கப்படவேண்டுமென தீர்மானிக்க இயலாது.அத்தகைய நேர்வில், மேற்படி பிரிவுகளின் கீழான நடைமுறையை நிச்சயமாக துணைகொள்ளலாம்.இது அவ்வாறு அனுமதிக்கப் படாவிட்டால், நம்பத்தகுந்த சான்று/சாட்சியை தம்வசம் வைத்துள்ள நபருக்கு நீதியை மறுப்பதாகும், ஆனால், மெய்ப்பிக்கும் முறையின் காரணமாக, சாட்சியச் சட்டத்தின் பிரிவு 65 பி (4) -இன் கீழ் முற்படுத்துகின்ற நபர் பெறவே இயலாத சான்றிதழ் இல்லாத நிலையில் நீதிமன்றத்தால் அந்த ஆவணம் பரிசீலிக்கப்படாது.

இவ்வாறு, பிரிவு 65-பி (உெறச்) (அவ்வாறே 65 பி (4))-இன் கீழ் சான்றிதழைக் கோருதல் எப்போதும் கட்டாயமல்ல.

15. அதற்கிணங்க, ஆவணத்தைக் கொணரும் குறிப்பாக, அக்கருவியை தம்வசம் வைத்திராத ஒரு தரப்பினரால் அளிக்கப்படும் மின்னணு சான்றினை ஏற்பதன்பேரிலான விசயத்தின் சட்ட நிலைப்பாட்டை நாங்கள் தெளிவாக்குகிறோம்.அந்தத் தரப்பினர், சாட்சியச் சட்டத்தின் பிரிவு 65 பி (4) -இன் சான்றிதழை முற்படுத்த கோரப்பட இயலாது.நீதியின் நலன் எங்கெல்லாம் அவ்வாறு நிலைநாட்டப்படவேண்டுமோ, அங்கெல்லாம் நடைமுறையிலிருக்கின்ற சான்றிதழ் கோருதல் என்ற பொருந்துமுறை நீதிமன்றத்தால் தளர்த்தப்படலாம்.

16. குற்றம் நடந்த இடத்தின் படக்காட்சி மற்றும் நிலை செயற்படு நடைமுறை (நி.செ.ந)- ஐ பயன்படுத்து வதற்கான வழிகாட்டு-வரைபடத்தின் இறுதி முடிவு செய்தல் உட்பட எஞ்சியுள்ள அம்சங்களைப் பரிசீலிப்பதற்கு, நாங்கள் வழக்கை 2018-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13-ஆம் நாளன்று ஒத்திவைக்கிறோம்.

17. நாங்கள், கற்றறிந்த நீதிமன்ற உதவியர், மூத்த வழக்குரைஞர் திரு. ஜெயந்த் பூஷன், மூத்த வழக்குரைஞர் திருமதி/செல்வி மீனாட்சி அரோரோ, இவருக்கு உதவியவர்களான வழக்குரைஞர் திருமதி/செல்வி அனன்யா கோஷ், மேலும், இந்திய அரசுக்காக முன்னிலையான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. யஷாங்க் அத்யரு மற்றும் கற்றறிந்த வழக்குரைஞர் திருமதி/செல்வி ஷிரின் கஜூரியா ஆகியோரால் அளிக்கப்பட்ட மதிப்பிற்குரிய உதவிக்காக எங்களுடைய உளமார்ந்த பாராட்டைப் பதிவு செய்கிறோம்.

மாண்புமிகு நீதியரசர் திரு. ஆதர்ஷ் குமார் கோயல்

மாண்புமிகு நீதியரசர் திரு. உதய் உமேஷ் லலித்

புதுதில்லி,
30.01.2018.

<u>உரிமைத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துக்கொள்வதற்க்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றம் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும். "